# தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
# (22.06.2016 முதல் 26.06.2016)

**அறிக்கைஎண் :050/2016** **தேதி:21.06.2016**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 30°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் பரவலான மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை:கோயமுத்தூர் (22.06.2016 முதல் 26.06.2016)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நான்கு நாட்களுக்கும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 73 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 20 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 22.06.16 | 7 | 32 | 22 | 6 | 80 | 73 | 20 | தெற்கு |
| 23.06.16 | 2 | 32 | 22 | 6 | 80 | 73 | 20 | தெற்கு |
| 24.06.16 | 2 | 32 | 22 | 6 | 80 | 73 | 20 | தெற்கு |
| 25.06.16 | 1 | 32 | 22 | 6 | 80 | 73 | 20 | தெற்கு |
| 26.06.16 | 0 | 32 | 22 | 6 | 80 | 73 | 20 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ அதிக அளவிலான மேகமூட்டம் தென்பட வாப்புள்ளதால், இறவை மஞ்சள், மக்காச்சோளம், கம்பு ஆகிய பயிர்களுக்கு மண் மூலம் உரம் அளிப்பதை தவிர்க்கவும்.
- ✓ காற்றின் வேகம் மணிக்கு 20 கிலோ மீட்டர் வேகத்துடனும் மற்றும் லேசான தூறல் மழையும் எதிர்பார்க்கப்படுவதால் முதிர்வடைந்த வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ தற்போது நிலவும் வானிலை காரணமாக, திராட்சை கொடிகளை கத்தரித்து, தொடர்ந்து போர்டோ கலவை (அல்லது) ஏதேனும் தாமிர பூஞ்சாணக் கொல்லியை 0.25 சதம் தெளிக்கவும்.
- ✓ தற்போது நிலவும் வானிலை காரணமாக, மல்லிகை செடிகளுக்கு 10 கிலோ தொழுஉரம் மற்றும் ஒரு செடிக்கு 60கிலோ, தழைச்சத்து 120 கிலோ மணிச்சத்து, மற்றும் 120 கிலோ சாம்பல்ச்சத்து என்ற அளவில் உரமிடவும்.
- ✓ அதிக காற்றின் ஈரப்பதம் நிலவுவதால், பால் கறப்பதற்கு முன்னும் பின்னும் பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசல் கொண்டு மடியை கழுவவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ அதிக அளவிலான மேகமூட்டம் தென்பட வாப்புள்ளதால், இறவை மஞ்சள், மக்காச்சோளம், கம்பு ஆகிய பயிர்களுக்கு மண் மூலம் உரம் அளிப்பதை தவிர்க்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.